மாவட்ட நீதிமன்றம் எண்.2, காஞ்சிபுரம்

முன்னிலை= திரு. ப.உ.செம்மல், எம்.ஏ., எல்.எல்.எம்.,

மாவட்ட நீதிபதி எண்.2,

மாவட்ட நீதிமன்றம் எண்.2, காஞ்சிபுரம்

2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

Election OP.No.77/2021 ல்

வ.வி.எண்.3/2023

என்.யுவராஜ் .. மனுதாரா்/4ம் எதிா்மனுதாரா்

எதிா்

எம். ஆனந்தி

.. எதிா்மனுதாரா்/மனுதாரா்.

இம்மனுவானது என்முன்பாக 29.09.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரா் தரப்பில் வழக்குரைஞா்கள் திருவாளா்கள்.சையத் ஃபாசி முகம்மது, E. விஜய், பி. செந்தில் பிரபு, பி. சஞ்சய் பிரசாத் ஆஜராகியும் 1ம் எதிா்மனுதாரா் தரப்பில் திருவாளா். எஸ். காா்த்திகேயன் ஆஜராகியும் இருதரப்பு தரப்பு வாதம் மற்றும் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் நிலுவையிலிருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் 26.07.2023 அன்று அசல் மனுவில் மனுதாரரை தோன்றா தரப்பினராக ஆக்கியிருந்த உத்தரவை இரத்து செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரா்/4ம் எதிா்மனுதாரா் தரப்பில் தாக்கல் செய்யபட்டுள்ள பிரமாணப்பத்திரத்தின் சுருக்கம் பின்வருமாறு

மனுதாரா் அசல் மனுவில் 4ம் எதிா்மனுதாரா். எதிா்மனுதாரா்/மனுதாரா் இம்மனுவை மனுதாரா் மீது தமிழ்நாடு பஞ்சாயத்தது சட்டம் 1994 பிரிவு 258 மற்றும் 259 உ/இ தமிழ்நாடு பஞ்சாயத்து தோ்தல் விதிமுறைகள் 1995 விதி 61 மற்றும் 66ன் கீழ் தோ்தல் அசல் மனுவை

தாக்கல் செய்துள்ளார். 26.07.2023 அன்று மனு எதிருரைக்காக வைக்கப்பட்டிருந்தது. மனுதாரரின் வழக்கறிஞர் மனுதாரருக்கு தகவல் தெரிவிக்காத காரணத்தால் மனுதாரருக்கு உடல்நலம் குறைவாக இருந்த காரணத்தால் அவரால் அவரது வழக்கறிஞரை சந்திக்க இயலாமல் போய்விட்டதால் தயார் செய்யப்பட்ட எதிருரையில் மனுதாரரின் கையெழுத்திடாமல் எதிருரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. எனவே மனுதாரரை தோன்றா தரப்பினராக ஆக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல.. எனவே 26.07.2023 அன்று அசல் மனுவில் மனுதாரரை தோன்றா தரப்பினராக்கி பிறப்பித்த உத்தரவை இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

3. இம்னுவில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் /அசல் மனுவின் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு—

இம்மனு தகுதியற்றது. செலவுத் தொகையுடன் தள்ளுபடிசெய்யப்படவேண்டியது. மனுதாரர் மனு மற்றும் பிரமாணப்பத்திரத்தில் தகவல்களை சரியாக கூறவில்லை. மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் தவறானவை. மனுதாரருக்கு உடல்நல குறைவு உண்மையில் ஏற்பட்டிருப்பின் அது குறித்து ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்திருப்பார். மணிமங்கலம் கிராமத்தில் எதிர்மனுதாரர் வசிப்பதால் இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரரின் உடல்நலம் குறித்து நன்கு தெரியும். மனுதாரா் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வசித்து வருகிறார். 31.03.2022லிருந்து 26.07.2023 வரை பல வாய்ப்புகள் எதிருரைக்காக வழங்கப்பட்டது. வழக்கை இழுத்தடிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் எதிருரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனு, தகுதியற்றது , மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் உள்ள இதர மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

5. பிரமாணப்பத்திரம், மனு மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில்இம்மனுவில்தீர்வுக்குரிய பிரச்சனையாக பின்வரும் பிரச்சனை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

5. மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு எதிராக 26.07.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட மனுதாரரை தோன்றா தரப்பிராக ஆக்கிவைத்த உத்தரவை இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுா என்பதேயாகும்.

6. <u>பிரச்சனைக்கு தீர்வு–</u>

இருதரப்புவாதம் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் இம்மனுவை பொறுத்து வாய் மொழி சாட்சியம் எதுவும் அளிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. இரு தரப்பு வாதத்தையும் பரிசீலனை செய்து பார்க்கின்றபோது மனுதாரருக்கு எதிராக 26.07.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட மனுதாரரை தோன்றா தரப்பினராக ஆக்கிவைத்த உத்தரவு முதல்முறையாக இருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. மனுதாரர் இம்மனுவோடு அசல் மனுவிற்கான எதிருரையும் தாக்கல் செய்துள்ளார்.

''இருபுறங்கேட்டு இசைவு கூறல்''

''மறுபுறம் கேட்டலே மாசறு நீதி''

என்பவை இயற்கை நீதியை ஒட்டி அமைந்த கோட்பாடுகள். இயற்கை நீதி என்பது நீதியின் நலன். மனுதாரருக்கு அசல் மனுவில் தனது தரப்பை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கும் பொருட்டும் தேர்தல் அசல் மனுவில் முழுமையான வகையில் தீர்முடிவை எட்டும் பொருட்டும் மனுதாரரை 26.07.2023 அன்று தோன்றா தரப்பினராக ஆக்கிவைத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்து உத்தரவு பிறப்பிப்பதே சரியான முடிவாக இருக்கும் என்று தீர்மானித்து அவ்வாறே இந்த பிரச்சனைக்கு விடையளிக்கப்படுகிறது.

8. இறுதியில் இம்மனு செலவுத்தொகை எதுவுமின்றி அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் வடித்துக்கொள்ளப்பட்டு பின்னர் கணிணியில் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./–ப.உ.செம்மல்
மாவட்ட நீதிபதி
மாவட்ட நீதிமன்றம் எண்.2
காஞ்சிபுரம்

<u>இரு தரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்–</u> இல்லை.

ஒம்./–ப.உ.செம்மல்
மா.நீ.
மா.நீ. எண்.2, காஞ்சிபுரம்.

வரைவு/சீரான உத்தரவு

Election OP.77/2021 ன்

வ.வி. எண். 3/2023

மாவட்ட நீதிமன்றம் எண்.2

காஞ்சிபுரம்

நாள்= 06.10.2023.